Victorian Equal Opportunity
& Human Rights Commission

# பாரபட்சம் பற்றிய தகவல்கள்

> உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள், உங்கள் முறையீடுகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள்

## பாரபட்சம்

பாரபட்சம், பாலியல் தொந்திரவு, பலிகடா ஆக்குதல், இன மற்றும் மத அவதூறு இவற்றிலிருந்து விக்டோரியச் சட்டம் மக்களைப் பாதுகாக்கிறது.

பாரபட்சம் என்பது ஒருவரைப் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் பாதகமாக நடத்துவதாகும்:

- சாதி, நிறம், பரம்பரை, நாடு, வம்சம் அல்லது இனப் பின்புலம்
- மத நம்பிக்கை அல்லது மதச் செயல்பாடுகளில் பங்கு
- உடல் ஊனம், நோய் அல்லது காயம் - இதில் வேலை சம்பந்தப்பட்ட காயமும் அடங்கும்
- பெற்றோர் அந்தஸ்து அல்லது குழந்தைகள் அல்லது மற்ற குடும்ப அங்கத்தினர்கள் பராமரிப்பில் பொறுப்பு ஏற்பதால் பராமரிப்பாளர் அந்தஸ்து
- இளமை அல்லது முதுமையைக் குறிக்கும் வயது, அல்லது பொதுவான வயது
- பாலினம்
- தங்களுடைய உரிமைகள் அல்லது வேலையில் உரியன வழங்கல் பற்றி அவர்கள் கேட்கும் கேள்விகளால் அல்லது எழுப்பும் சந்தேகங்களால் விளையும் வேலை சம்பந்தப்பட்ட நடவடிக்கை
- தொழிற்சங்கம் போன்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் உறுப்பினர் ஆவது உட்பட வர்த்தகம் சம்பந்தப்பட்ட நடவடிக்கை அல்லது வர்த்தகம் சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் பங்கு பெறுதல் அல்லது தொழிற்சங்கத்தில் சேர வேண்டாம் என முடிவெடுத்தல்
- உயரம், எடை, உடல் அளவு, முடி அல்லது பிறப்பு அடையாளம் போன்ற உடல் சம்பந்தப்பட்ட அம்சங்கள்
- கர்ப்பம் மற்றும் தாய்பால் ஊட்டுதல்
- சட்டபூர்வமான பாலுறவு செயல்பாடுகள்
- பாலின ஈர்ப்பு அல்லது எதிர்பாலினர், ஓரினச் சேர்க்கையுடைய ஆண், ஓரினச் சேர்க்கையுடைய பெண், இருபாலினர், அலிகள் அல்லது விநோத குணமுடையோர் போன்ற பாலின அடையாளம்
- திருமணமானவரா, விவாகரத்து செய்தவரா, திருமணம் ஆகாதவரா அல்லது மணமாகாது சேர்ந்து வாழ்பவரா என்ற குடும்ப வாழ்க்கைப் பின்னணி
- அரசியல் நம்பிக்கை அல்லது அரசியல் நடவடிக்கையில் பங்கு பெறுதல் அல்லது அரசியல் நடவடிக்கையில் எந்தவிதத்திலும் பங்கு பெறாமல் இருத்தல்
- இந்த தனிப்பண்புகளில் எதாவது ஒன்றைக் கொண்ட அல்லது கொண்டிருப்பதாக கருதப்படும் எவருடனாவது தொடர்பு இருத்தல்

பாலியல் தொந்திரவும் சட்ட விரோதமானது. இதில் பாலியல் சம்பந்தப்பட்ட கருத்துகள் அல்லது மின்னஞ்சல்கள், தேவையில்லாமல் தொடுதல் அல்லது உடலுறவுக்கு அழைத்தல் மற்றும் பாலியல் சம்பந்தப்பட்ட பொருட்களை தேவையற்ற முறையில் வெளிப்படையாகக் காண்பித்தல் போன்றவையும் அடங்கும்.

## எங்கெல்லாம் பாரபட்சம் சட்ட விரோதமாகிறது

விக்டோரியாவில் பின்வருபவைகளில் நிகழும் பாரபட்சம் சட்டவிரோதமானது:

- குடியிருப்பு
- மன்றங்கள்
- கல்வி
- பகுதிநேர, முழுநேர, தற்காலிக, ஒப்பந்த மற்றும் பரீட்சார்த்த பணியாட்கள் அத்துடன் பயிற்சி பெறுவோர் மற்றும் பணி பழகுவோர் சம்பந்தப்பட்ட வேலைகள்
- பொருட்கள் மற்றும் சேவைகள்
- நில விற்பனை மற்றும் சொத்து மாற்றம்
- உள்ளூர் அரசு
- விளையாட்டு.

## பாரபட்சத்தின் வகைகள்

சட்டத்தால் பாதுகாக்கப்பட்டத் தனிப்பண்பு ஒன்றின் அடிப்படையில், யாராவது பாதகமாக நடத்தப்பட்டால் நேரடி பாரபட்சம் நேர்கிறது.

தான் நன்கு தகுதியுடையவன் என்று எண்ணுகின்ற ஒரு வேலையின் நேர்காணலுக்கு ஜார்ஜ் அழைக்கப்படவில்லை. அதற்குத் தனது இனப் பின்புலம்தான் காரணம் என்று நம்புகிறான்.

அனைவரையும் சமமாக நடத்தும்போது, தனிப்பண்பு ஒன்றின் அடிப்படையில் யாராவது ஒருவர் பாதிக்கப்பட்டால் மறைமுக பாரபட்சம் நேர்கிறது.

கடை மேலாளர் எல்லா வாடிக்கையாளர்களிடமும் சொந்தக் காசோலையை அங்கீகரிக்குமுன் அவர்களின் ஓட்டுநர் உரிமத்தைக் கேட்கிறார். ஆனால் ரமேஷிடம் உரிமம் கிடையாது. ஏனென்றால் அவனுக்கு கண்பார்வைக் குறைபாடு உள்ளது.

## பாரபட்சத்துக்குரிய தகவல்களைக் கேட்டல்

பாரபட்சமான வழியில் பயன்படுத்தப்படுமென்றால், சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட எந்தத் தனிப்பண்புகளைப் பற்றிய தகவல்களைக் கேட்பதும் சட்டவிரோதமாகும்.

ஒரு வேலைக்கான நேர்காணலில், அலியிடம் அவள் திருமணமானவரா மேலும் குழந்தைகள் பெறும் திட்டம் உண்டா என்றெல்லாம் கேட்கப்பட்டது. அந்த வேலைக்கு மிகச் சிறந்த நபராக அவள் இருந்தபோதும், அலிக்கு அந்த வேலைகிடைக்கவில்லை.

## அவதூறு

அவதூறு என்பது ஒரு தனிப்பட்ட நபரையோ, மக்கள் கூட்டத்தையோ, அவர்களின் இனம் அல்லது மதத்தின் அடிப்படையில் மற்றவர்கள் வெறுக்க, அவமரியாதை செய்ய அல்லது நிந்திக்க ஊக்குவிக்கும் நடத்தையாகும்.

இதில் ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது மதக் கூட்டத்தினர் மீது பேச்சு, எழுத்து, இணையவழி அல்லது உடல் சம்பந்தப்பட்ட நடத்தைகளும் அடங்கும். இது அவர்கள் மீது ஏளனம் செய்ய, வெறுக்க அல்லது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட, அவர்களுடைய சொத்துக்களை சேதம் செய்ய மற்றும் அவர்களுக்கு எதிராக தவறான கோரிக்கையை எழுப்ப மற்றவர்களை ஊக்குவிக்கும்.

மற்றவர்களை அவதூறு செய்ய அனுமதி அளிப்பது அல்லது உதவி செய்வதுகூட சட்ட விரோதமானது. எடுத்துக்காட்டாக, அவர்களைப்பற்றிய தகவல்களைப் பிரசுரிப்பது அல்லது விநியோகிப்பது போன்றவை.

நியாயமானதாகவும், நல்ல நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்பட்டவையாகவும் இருக்கும் பட்சத்தில், நிறவெறி நடத்தையைப் பற்றிய பத்திரிகைச் செய்திகளைப் பிரசுரிப்பது போன்ற சில நடத்தைகள் அவதூறாக இல்லாமல் இருக்கலாம். ஒரு நபரின் இனம் அல்லது மதத்தைப் பற்றிய சில கருத்துக்கள் அல்லது நகைச்சுவைகள் அவதூறாக இல்லாமலும் இருக்கலாம். ஆனால் அவை சட்டத்தால் காக்கப்பட்ட பொது வாழ்க்கையில் உள்ள, பணிபுரியும் இடம் போன்ற, எட்டு இடங்களில் ஒன்றில் நிகழ்ந்தால் அவையும் பாரபட்சம்தான்.

## பலிகடா ஆக்குதல்

பலிகடா ஆக்குதல் என்பது ஒருவருக்குக் கேடு விளைவிப்பது. ஏனென்றால் அவர்கள் தங்களுடைய உரிமைகளைப் பேசுகிறார்கள், முறையீடு செய்கிறார்கள் அல்லது மற்றவர்கள் முறையீடு செய்ய உதவி புரிகிறார்கள். பலிகடா ஆக்குதலும் சட்ட விரோதமானது.

## Commission-இடம் முறையீடு செய்வது

உங்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுவதாகவோ, பாலியல் தொந்திரவு செய்யப்படுவதாகவோ அல்லது நீங்கள் பழிவாங்கப்படுவதாகவோ, அவதூறு செய்யப்படுவதாகவோ நீங்கள் எண்ணினால் <u>எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்</u>. நாங்கள் முறையீடு செய்யும் முறையைப் பற்றிய தகவல்களை உங்களுக்கு அனுப்புவோம். எங்களால் உதவிபுரிய முடியாவிட்டால், உதவிபுரியக்கூடிய யாரிடமாவது உங்களை அனுப்ப முயற்சி செய்வோம்.

உங்கள் முறையீட்டை எங்களுக்குக் கடிதம் எழுதியோ அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பியோ அல்லது <u>இணைய முறையீட்டுப் படிவத்தை</u> நிரப்பியோ தெரிவிக்கலாம். உங்களுடைய முறையீட்டை உங்களுக்கு விருப்பப்பட்ட மொழியில் எழுதலாம் அல்லது நீங்கள் எங்களை அழைத்தால் நாங்கள் உங்களுக்கு முறையீட்டை எழுத உதவ முடியும். முறையீட்டை எழுத எந்தவித செலவும் கிடையாது. மேலும் முறையீட்டை எழுத வழக்கறிஞர் உதவியும் தேவையில்லை.

Commission உங்கள் முறையீட்டைத் தீர்த்துவைப்பதில் உதவி செய்ய முயற்சிக்கும். ஆனால் உங்களுக்காகவோ, நீங்கள் முறையீடு செய்யும் நபர் அல்லது நிறுவனத்துக்காகவோ ஆதரித்துப் பேசாது.

நீங்கள் ஒரு முறையீட்டைச் சமர்ப்பித்தால், உங்கள் முறையீட்டைப்பற்றிப் பேசுவதற்கு உங்களை நாங்கள் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைக் கேட்கலாம். முறையீட்டைச் சமாதான முறையில் எவ்வாறு நீங்கள் தீர்க்க விரும்புகிறீர்கள் என்பதைப்பற்றி நாங்கள் உங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தலாம்.

Victorian Equal Opportunity & Human Rights Commission

பொதுவாக Commission நீங்கள் முறையீடு செய்திருக்கும் நபரையோ, நிறுவனத்தையோ தொடர்புகொண்டு உங்கள் முறையீட்டுப் பிரதியை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களது கருத்துக்களைக் கேட்கும். உங்களது முறையீட்டுக்கு அவர்கள் என்ன பதில் தருகிறார்கள் என்பதை உங்களுக்கு நாங்கள் தெரிவிப்போம்.

சில வேளைகளில் உங்கள் முறையீட்டை எங்களால் கையாள இயலாது என நாங்கள் முடிவு செய்ய நேரிடலாம். அவ்வாறு நேரிட்டால் உங்களை நாங்கள் தொடர்புகொண்டு காரணத்தை விளக்குவோம்.

பல வேளைகளில், உங்களுக்கும், நீங்கள் முறையீடு செய்திருக்கும் நபர் அல்லது நிறுவனத்துக்கும் நாங்கள் உதவி செய்து முறையீட்டைச் சமாதான முறையில் எவ்வாறு தீர்ப்பது என்ற வழிமுறையைக் கண்டுபிடிக்க முயல்வோம். சமாதானப் பேச்சு நேருக்கு நேர் சந்திப்பிலோ, தொலைபேசி கலந்தாய்விலோ, மின்னஞ்சல் மூலமாகவோ, சமாதானத் தூதுவர் வழியான செய்தி மூலமாகவோ நடத்தப்படும். முறையீடுகள் பல்வேறு வழிகளில் தீர்க்கப்பட முடியும். எடுத்துக்காட்டாக, அவை ஒரு மன்னிப்பு மூலமாகவோ, கொள்கையில் ஒரு மாற்றம் மூலமாகவோ, அலுவலர் பயிற்சி மூலமாகவோ அல்லது நஷ்டஈடு மூலமாகவோ இருக்கலாம்.

## Commission-ஐப் பற்றி

Victorian Equal Opportunity and Human Rights Commission என்பது ஒரு தனித்தியங்கும் சட்டதிட்ட உரிமையுடைய நிறுவனம். அதன் பொறுப்புகள் மூன்று சட்டங்களின் அடிப்படையில் உள்ளன:

- *Equal Opportunity Act 2010*
- *Racial and Religious Tolerance Act 2001*
- *Charter of Human Rights and Responsibilities Act 2006*

## Commission சேவைகளில் பின்வருபவை அடங்கும்:

- ஓர் இலவச விசாரணை தொலைபேசித் தொடர்பு
- நியாயமான, சர்ச்சைகளைத் தீர்க்கும் ஓர் இலவசச் சேவை
- அனைவருக்கும் சமவாய்ப்பு, இன மற்றும் மத அவதூறு மற்றும் Charter of Human Rights and Responsibilities பற்றிய தகவல் மற்றும் கல்வி
- கல்வி, பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள்.

சமவாய்ப்பு மற்றும் மனித உரிமைகள் பற்றிய தகவல்களுக்குத் தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

### எங்களைத் தொடர்புகொள்ள:

விசாரணைத் தொடர்பு எண்: 1300 292 153
மொழிபெயர்த்துரைப்பாளர்கள்: 1300 152 494
மின்னஞ்சல்: enquiries@veohrc.vic.gov.au

Level 3, 204 Lygon Street, Carlton Victoria 3053
தொலைபேசி: 1300 891 848
தொலைநகல்: 1300 891 858
**TTY** (கேட்கும் திறன் குறைபாடு உள்ளோர்க்கான தொலைபேசி): 1300 289 621
இணையதளம்: humanrightscommission.vic.gov.au
இணையவழி முறையீட்டுப் படிவம்: humanrightscommission.vic.gov.au/complaints

Victorian Equal Opportunity & Human Rights Commission

Victorian Equal Opportunity and Human Rights Commission-ஆல் வெளியிடப்பட்டது, ஜுன் 2011.

*மறுப்பறிக்கை: இந்தத் தகவல்கள் ஒரு வழிகாட்டி மட்டுமே. சட்ட ஆலோசனைக்கான ஒரு சரியான மாற்று இது அல்ல.*